# கருஞ்சட்டைத் தமிழர்

மாதம் இருமுறை

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

● மலர்:7 இதழ்: 1 ● திருவள்ளுவர் ஆண்டு 2047 ● மார்ச் 16-31, 2017 ● விலை:ரூ.5 ● Volume:7 Issue:1 ● March 16-31, 2017 ● Price:Rs.5


## வடமாநிலத் தேர்தல்கள்

# கற்றுத்தரும் பாடம்







**சுப.வீரபாண்டியன்**

உ.பி., பஞ்சாப், உத்தரகாண்ட், கோவா, மணிப்பூர் ஆகிய ஐந்து மாநிலத் தேர்தல் முடிவுகள் சில செய்திகளையும்,சில பாடங்களையும் கொண்டு வந்துள்ளன.

உ.பி.யிலும், உத்தரகாண்டிலும் பா.ஜ.க பெற்றுள்ள பெரும் வெற்றியைக் குறைத்து மதிப்பிட்டு நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ள வேண்டியதில்லை. வாக்கு இயந்திரத்தில் ஏதோ செய்து விட்டார்கள் என்று மாயாவதி சொல்வதெல்லாம் நம்பக் கூடியதன்று. அவ்வாறெனில், பஞ்சாபில் மட்டும் இயந்திரங்களைத் தங்கள் விருப்பத்திற்கு மாற்ற முடியாமல் போய்விடுமா என்ன?

குடும்பத் சண்டையும், கூட்டணிச் சண்டையும்தான் தோல்விக்குக் காரணம் என்கிறார் பிஹார் முதலமைச்சர் நித்திஷ் குமார். அதில் ஒரு உண்மை இருக்கவே செய்கிறது. தேர்தலுக்கு ஆறு மாதங்களுக்கு முன்னால் உ.பி.யில் அப்பா, பிள்ளை, சித்தப்பா இடையே நடந்த குடுமிபிடிச் சண்டையின் நெடி இந்தியா முழுவதும் வீசியது. அரசியல்வாதிகளின் மீதே ஓர் அருவருப்பை அது கொண்டுவந்தது. இவர் அவரை நீக்குவதும், அவர் இவரை நீக்குவதுமாகச் சிறுபிள்ளை விளையாட்டு அங்கு நடைபெற்றது. அக்கட்சியின் ஆதரவாளர்களே முகம் சுழிக்கும் அளவுக்கு அந்தக் கலவரங்கள் அங்கு நடைபெற்றன. சமாஜ்வாதி, காங்கிரஸ் கட்சியின் கூட்டணி தோல்வி அடைந்ததற்கு அது ஒரு முதன்மையான காரணம் என்பதை யாரும் மறுக்க முடியாது.

நிதிஷ் குமார் சொல்வதை போல, பெரும் கூட்டணி உருவாகாமல் போனதும் இன்னொரு காரணம்தான். பிஹாரில் நிதிஷ், லாலு, காங்கிரஸ் கூட்டணி ஏற்பட்டதால்தான் வெற்றி கிடைத்தது. ஆனால், உ.பி.யில், முலாயம், மாயாவதி இருவரும் ஒன்று சேரவே இல்லை. அதனால் பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களின் வாக்குகள் பிரிந்தன. அது பா.ஜ.க. விற்கு நல்லதாகப் போய்விட்டது.

மேலே சொல்லப்பட்டுள்ளவை உண்மையான காரணங்கள்தான் என்றாலும், இவை சில இடங்களில் வெற்றியைத் தீர்மானிப்பதற்கு உதவியிருக்கலாம். அல்லது, வாக்குகள் வித்தியாசத்தைக் கூட்டுவதற்குப் பயன்பட்டிருக்கலாம். அவ்வளவுதானே தவிர, இத்தனை பெரிய வெற்றிக்கு அவை மட்டுமே காரணம் என்று சொல்லி விட முடியாது. நான்கில் மூன்று பங்கு வெற்றியை ஒரு கட்சி பெற வேண்டும் என்றால் அது ஒரு அலை, சுனாமி அலை என்றுதான் சொல்ல வேண்டும். அவ்வளவு பெரிய அலை வீசுவதற்கு என்ன காரணம்?

உத்தரகாண்ட் மாநிலம் தனிப் போக்குடையது. உ.பி.யிலிருந்து பிரிக்கப்பட்டு, இந்தியாவின் 27ஆவது மாநிலமாக, 2000 நவம்பரில் அது உருவெடுத்தது. அங்கு பார்ப்பனர்களும், ராஜ் புத்திரர்களும் எண்ணிக்கையில் மிகுதி. வருண அதர்மம் அங்கு பெரும்பான்மையோரால் ஏற்கப்பட்ட ஒன்று. ஒரு கோடியே ஒரு லட்சம் மக்களை மட்டுமே கொண்டுள்ள சிறிய மாநிலமான உத்தர்காண்டில் இந்தி ஆட்சி மொழி, சமற்கிருதம் இணை ஆட்சிமொழி. பார்ப்பனர்களால் 'தேவபூமி' என்று அழைக்கப்படும் மாநிலமும் உத்த்ரகாண்ட்தான். எனவே அங்கு பா.ஜ.க. பெற்றுள்ள வெற்றியைப் புரிந்து கொள்ள முடிகிறது என்றாலும், அவ்வளவு பெரிய வெற்றிக்கு என்ன காரணம் என்று சிந்தித்தல் நல்லது.

சென்ற தேர்தலில் (2012), அங்கு காங்கிரஸ், பா.ஜ.க.இரண்டு கட்சிகளும் சமமான இடங்களை பெற்றிருந்தன. காங்கிரஸ் 32 இடங்களிலும், பா.ஜ.க. 31 இடங்களிலும் வென்றன.யாருக்கும் பெரும்பான்மை இல்லை. இறுதியில் காங்கிரஸ் கூட்டணி ஆட்சி அமைத்தது. ஆனால் 2016 மார்ச்சில் காங்கிரசின் 9 சட்டமன்ற உறுப்பினர்கள் ஆளும் கட்சிக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தினர். பிறகு ஆட்சி கலைக்கப்பட்டதும், உயர்நீதி மன்றம், உச்ச நீதி மன்றம் என்று வழக்குகள் நடந்ததும் நாம் அறிந்தவையே. இந்தக் குழப்பங்களும், காங்கிரஸ் கட்சியின்

மீது மக்களுக்கு நம்பிக்கை குறைந்ததற்குக் காரணங்களாக இருக்கலாம்.

உத்தர்காண்டில் இஸ்லாமியர்களின் வாக்குகள் குறைவு. ஆனால் உ.பி.யில் ஏறத்தாழ 21 விழுக்காடு இஸ்லாமியர்களின் வாக்குகள் உள்ளன. பிறகு ஏன் சமாஜ்வாதி, கங்கிரசுக்கு உ.பி.யில் இவ்வளவு பெரிய வீழ்ச்சி? முத்தலாக் விவகாரத்தில், இஸ்லாமியப் பெண்கள் ஏமாந்து, பா.ஜ.க வை நம்பியிருக்கக் கூடும் என்று ஒரு கருத்து சொல்லப்படுகிறது. அதனால் இஸ்லாமியப் பெண்களின் வாக்குகளில் ஒரு பகுதி அங்கு சென்றிருக்க வாய்ப்புள்ளது. அது குறித்த ஆய்வும் தேவைப்படுகின்றது..

500, 1000 ரூபாய் நோட்டுகள் செல்லாது என்ற அறிவிப்பை ஏழை, எளிய மக்கள் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை என்றே தெரிகிறது. அது நடுத்தட்டு மக்களைத்தான் பெரிதும் பாதித்தது. ஆனால் நடுத்தட்டில் உள்ள இளைஞர்கள் பலர் இன்னும் மோடி மயக்கத்திலிருந்து விடுபடாமல் உள்ளனர் என்ற உண்மையையும் நாம் கணக்கில் கொள்ள வேண்டியுள்ளது.

அதே நேரத்தில் பஞ்சாபில் காங்கிரஸ் பெற்றுள்ள மகத்தான வெற்றியையும், பா.ஜ.க அடைந்துள்ள மகத்தான தோல்வியையும் அலட்சியப்படுத்த வேண்டியதில்லை. சென்ற முறை ஆளும் கட்சியாய் இருந்த பா.ஜ.க இப்போது அங்கு மூன்றாவது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது. அகாலிதளக் கூட்டணிக்கு 18 இடங்கள் கிடைத்துள்ளன என்ற போதிலும், பா.ஜ.க பெற்றுள்ள இடங்கள் வெறும் மூன்று மட்டும்தான்.



கோவாவில் அக்கட்சி முதல் இடத்தை இழந்துள்ளது. எனவே, பா.ஜ.க. வின் வெற்றியினால் நாம் விரக்தி அடைந்து விடும் எல்லைக்கும் செல்ல வேண்டியதில்லை.

எனினும் சில பாடங்களைப் பல கட்சிகளும் கற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. முதலில் காங்கிரஸ், தன் உட்கட்சி சண்டையை ஓரளவுக்கேனும் கட்டுக்குள் கொண்டுவர வேண்டும். தங்களைத் தவிர மற்ற எல்லாக் கட்சிகளையும் 'சம தூரத்தில்' வைத்துப் பார்க்கும் 'தனிப்பெரும் சித்தாந்தத்தை'ச் சற்று ஒதுக்கி வைத்து, பொதுவுடமைக் கட்சிகள், பொது எதிரியை வீழ்த்தும் குறிக்கோளை முன்னெடுக்க வேண்டும். பொது மக்களை மோடி மாயையிலிருந்து முற்றுமாக வெளிக்கொண்டுவர வேண்டும்.

இந்த உறுதிகளை எடுத்துக்கொண்டு அனைவரும் பணியாற்றவில்லை என்றால், காவிப்படையினர் நாட்டை மலிவு விலைக்கு, 'கார்ப்பொரேட்' முதலாளிகளிடம் விற்று விடுவார்கள். அம்பேத்கார் சொன்ன, 'பார்ப்பனியம், முதலாளித்துவம்' ஆகிய இரு சமூகத் தீமைகளும் இங்கு சலங்கை கட்டி ஆடுவதை வேடிக்கை பார்ப்பதைத் தவிர நமக்கு வேறு வழியிருக்காது! ●





# நெடுவாசல் ஹைட்ரோகார்பன் திட்ட எதிர்ப்புப் போராட்டமும் தாமிரபரணித் தீர்ப்பும்

நன்றி: ஓவியர் பரணி ஆனந்த்

வழக்கிறஞர் மு.வெற்றிச்செல்வன்
பூவுலகின் நண்பர்கள்

1999ம் ஆண்டு உலகமயப் பொருளாதாரக் கொள்கையின் அடிப்படையில் இயற்கை எரிவாயு மற்றும் எண்ணெய் வளங்களைத் தனியார்மயமாக்க “New Exploration Licensing Policy” என்னும் புதிய கொள்கை அறிமுகமானது. இயற்கை வளங்களின் பயன்பாடு அனைவருக்கும் கிடைக்கின்ற வகையில் அரசின் செயல்பாடுகள் இருக்க வேண்டும் என்று கூறும் அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரானது இந்தப் புதிய கொள்கை. இக்கொள்கையின் மூலம் இயற்கை எரிவாயுக்கள் தொடர்பான வர்த்தகத்தில் அந்நிய முதலீடு 100 சதவீதம் அனுமதிக்கப்பட்டது. அதுவரை லாபகரமாக இயங்கி வந்த அரசு நிறுவனமான ஓ.என்.ஜி.சி, இயற்கை எரிவாயு மற்றும் எண்ணெய் வளங்கள் பற்றிய தகவல்களைக் (தனியார் நிறுவனங்களுக்கு) கொடுக்கும் மையமாக மாறிப்போனது.

தனியார் வர்த்தகத்தை மேம்படுத்த, 2006ம் ஆண்டு மத்திய பெட்ரோலிய அமைச்சகத்தின் கீழாக, [Oil Fields (Regulation and Development) Act, 1948 சட்டத்தின்படி] ஹைட்ரோ கார்பன் பொது இயக்குநரகம் (Directorate General of Hydrocarbons) உருவாக்கப்பட்டது.

எல்லா இயற்கை எரிவாயுக்களிலும், கச்சா எண்ணெயிலும் ஹைட்ரோ கார்பன் நிச்சயமாக இருக்கும். கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுக்களை மரபு ஹைட்ரோ கார்பன்கள் (Conventional Hydrocarbons) என்றும், நிலக்கரி படுகை மீத்தேன் (Coal Bed Methane), நிலக்கரி சுரங்க மீத்தேன் (Coal Mining Methane), ஷேல் எரிவாயு (Shale Gas), டைட் எரிவாயு (Tight Gas) போன்ற இயற்கை எரிவாயுக்களை மரபுசாரா ஹைட்ரோ கார்பன்கள் (Unconventional Hydrocarbons) என்றும் வகைப்படுத்துகின்றனர்.

மரபு சாரா ஹைட்ரோ கார்பன் வகையிலுள்ள புதிய எரிவாயுக்களின் பயன்பாடுகள் கண்டறியப்பட்ட பின்பு, பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு விதிகளில் (Petroleum and Natural Gas Rules, 1959) பல திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன. குறிப்பாக 2003ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட சட்டத்திருத்தத்தின் அடிப்படையில் மீத்தேன் எரிவாயு குறித்தான பிரிவுகள் முதன்முதலாக சட்ட விதிகளில் சேர்க்கப்பட்டன. மேலும், இயற்கை எரிவாயுக்கான விளக்கமும் விரிவாக்கப்பட்டன. அதாவது மீத்தேன், ஷேல் போன்ற புதிய வகை எரிவாயுக்களை வர்த்தக ரீதியில் தனியார் நிறுவனங்களும் எடுப்பதற்குத் தேவையான சட்டத்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதன் தொடர்ச்சியாகவே, நெடுவாசலில் ஹைட்ரோ கார்பன் இயற்கை எரிவாயுக்களை எடுப்பதற்கான அனுமதியை தற்போது ஜெம் லேபோர்ட்டிரிஸ் தனியார் நிறுவனத்திற்கு மத்திய அரசு வழங்கியுள்ளது. இதுவரை மத்திய அரசோ மாநில அரசோ நெடுவாசலில் என்ன விதமான இயற்கை எரிவாயு எடுக்கப்பட இருக்கிறது என்பதை மக்களுக்குத் தெரிவிக்க இல்லை.

அமெரிக்க புவியியல் ஆய்வு மையத்தால் (ஜூன் 2013) வெளியிடப்பட்ட அறிக்கையில், நெடுவாசல் உள்ளடங்கிய காவேரி டெல்டா பகுதிகளில் ஷேல் எரிவாயு இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

சுமார் 10,000 அடி ஆழ்துளைக் கிணற்றைத் தோண்டி, பக்கவாட்டில் பாறைகளைச் செயற்கையாகப் பிளவுறச் செய்யும் ஹைட்ராலிக் ஃபிராக்சரிங் (Hydraulic Fracturing) தொழில்நுட்பத்தின் மூலமே ஷேல், மீத்தேன் உள்ளிட்ட ஹைட்ரோ கார்பன் எரிவாயுக்களை எடுக்க முடியும். இப்படி ஆழ்துளைக் கிணறு தோண்டும் பொழுது நிலத்தடி நீரை 2,000 அடிவரை இறைத்துவிடுவார்கள். தவிர இத்தொழில்நுட்பத்திற்கு 13,25,000 லிட்டர் நீர் தேவையும் உள்ளது. அதோடு இந்த தொழில்நுட்பத்தில் ரேடியம் 226, பாதரசம், யுரேனியம், மெத்தனால், ஹைட்ரோ குளோரிக் அமிலம், பார்மால்டிஹைடு போன்ற வேதிப்பொருட்களுடன், பிடெக்ஸ் (Benzene, Toluene, Ethyl Benzene Xylenes - BTEX) உள்ளிட்ட சுமார் 600 வகையான ரசாயனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. (பார்க்க: “மீத்தேன் அகதிகள்” – த.செயராமன்).

இதன் காரணமாக நீர், நிலம், காற்று என்று சுற்றுச்சூழல் கடுமையாகப் பாதிக்கப்படும். ரசாயனம் கலந்த காற்றை சுவாசிக்கும் மக்களுக்குப் பல்வேறு உடல்நிலைக் குறைபாடுகள் உண்டாகும். நீலத்தடி நீர் உப்புமயமாகும். இவை எல்லாவற்றையும் விட ஆபத்தானது ஹைட்ராலிக் ஃபிராக்சரிங் காரணமாக சிறிய அளவிலான பூகம்பம் ஏற்படுவதற்கான வாய்ப்பும் உள்ளது என்பது தான்.

இதில் மற்றொரு கொடுமை என்னவென்றால், இத்திட்டங்களுக்கான மாநில அரசுகள் வழங்க வேண்டிய (நீர், நிலம், காற்று தொடர்பான) அனுமதிகளை மத்திய அரசே வழங்குவதற்கான ஆணை ஒன்றும் 2013–ம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது.

## தாமிரபரணி தீர்ப்பு:

கோக் மற்றும் பெப்சி நிறுவனங்கள் தாமிரபரணியில் நிலத்தடி நீர் எடுப்பதற்கு விதிக்கப்பட்ட தடை உத்தரவை நீக்கி ஆணை பிறப்பித்துள்ளது உயர் நீதிமன்ற மதுரை கிளை. முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அப்பாவு தொடுத்த வழக்கில் இத்தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இதற்கு நீதிமன்றம் சொல்லும் காரணம், கோக் மற்றும் பெப்சி நிறுவனங்களைத் தவிர வேறு பல நிறுவனங்களும் தாமிரபரணி நீரைப் பயன் படுத்துகின்றன என்பது தான். உதாரணமாக நாளொன்றுக்கு ஏ.டி.சி. டயர் நிறுவனம் 10 லட்சம் லிட்டர், பெப்ஸியின் பிரதிஷ்டா பிஸினஸ் சொலுசன்ஸ் 15 லட்சம் லிட்டர்கள், கோக்கின் சவுத் இந்தியா பாட்டிலிங் 18 லட்சம் லிட்டரகள், ஸ்டெர்லைட் நிறுவனம் ஒரு கோடியே முப்பத்தியாறு லட்சம், அமுல்யா ஸீ புட்ஸ் 2 லட்சம் லிட்டர்கள் தினமும் எடுக்க தமிழக அரசின் அனுமதி பெற்றுள்ளன. இது தவிர கோக்கும் பெப்ஸியும் தாமிரபரணியின் உபரி நீரான 5049 mcft நீரில் 80 சதவீதம் மட்டுமே, அதாவது 43 mcft நீர் மட்டுமே எடுப்பதாகவும், சிப்காட்டின் மொத்த நீரில் 20% மட்டுமே எடுப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

உண்மையில் நிலத்தடி நீரை வர்த்தகப் பயன்பாட்டிற்காக எடுப்பதை முறைப்படுத்தவும், கண்காணிக்கவும் போதிய சட்டங்கள் இல்லை என்பதே இப்பிரச்சனையின் மையப்புள்ளி. 2003ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட தமிழ்நாடு நிலத்தடி நீர் மேலாண்மைச் சட்டம் “அம்மா குடிநீர்” வர்த்தகத்திற்காகப் பின்வாங்கப்பட்டது.

இதுபோன்ற மக்கள் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண நீதிமன்றம் செல்லலாமா என்கிற கேள்வியும் தற்போது பரவலாக விவாதிக்கப்படுகிறது. ஜனநாயகத்தில் மக்களே முழு அதிகாரம் பெற்றவர்கள். நீதிமன்றத் தீர்ப்பாக இருந்தாலும் அதனை மக்கள் மன்றத்தால் மாற்ற முடியும். இந்திய அரசமைப்புச் சட்டத் திருத்தம், பெரியார் நடத்திய உச்ச நீதிமன்ற தீர்ப்பிற்கு எதிரான போராட்டத்தின் காரணமாகவே கொண்டு வரப்பட்டது. நீதிமன்றத் தீர்ப்பை வென்ற கோக்கை பிளாச்சிமடா மக்கள் போராட்டம் விரட்டியடித்தது.

மேற்கு நாடுகளில் நீதிமன்றத் தீர்ப்புகள் கடுமையாக விமர்சிக்கப்படுகின்றன. நீதிமன்றம் முன்பாக மக்கள் போராட்டம் நடத்துவதும் அங்கு அனுமதிக்கப்படுகிறது. கருத்து சுதந்திரம் என்பது நீதிமன்ற நடைமுறைகளைக் கேள்வி கேட்கும் சுதந்திரத்தை உள்ளடக்கியதே. ●

# இரோம் ஷர்மிளாவின் தோல்வியும்

# குற்றப் பின்னணியினரி வெற்றியும்



2000 ஆம் ஆண்டு நவம்பர் 2

**ம**ணிப்பூர் மாநிலத்தில் உள்ள மலோம் என்னும் சிற்றூரில், காரணமின்றியும், கண்மூடித்தனமாகவும் பொது மக்களின் மீது ராணுவம் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் சிலர் இறந்து போனார்கள். அந்த மாநிலத்தையே அந்த நிகழ்வு உலுக்கியது. எனினும் சில நாள்களில் பலரும் அதனை மறந்து போனார்கள். ஆனால் ஒரு 28 வயதுப் பெண்ணால் அதனை மறக்க முடியவில்லை. அங்கு நடைமுறையில் இருந்த, இன்றும் இருக்கின்ற ஆயுதப்படை (சிறப்பு அதிகாரங்கள்) சட்டம் 1958 தான் காரணம் என்பதை உணர்ந்து, அதனை மத்திய அரசு திரும்பப்பெறும் வரை பட்டினிப்போர் நடத்துவேன் என்று சொல்லி, அவர் உண்ணாநிலைப் போராட்டத்தில் இறங்கினார். அந்த தியாகப் பெண்மணிதான் இரோம் ஷர்மிளா.

ஓராண்டு, ஈராண்டு அல்ல, மக்களுக்கான அந்த வீர மங்கையின் போராட்டம் 16 ஆண்டுகள் தொடர்ந்தது . மூக்கு வழியாகச் செலுத்தப்பட்ட திரவ உணவில் மட்டுமே உயிர் வாழ்ந்தார். போராட்டத்திற்கு அரசுகள் அசைந்து கொடுக்காததால், மக்களைச் சந்திக்க முடிவெடுத்தார். நடந்து முடிந்த மணிப்பூர் சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டார்.

தங்களுக்காக 16 ஆண்டுகளாய்த் தன் இளமை, சுகம் எல்லாவற்றையும் துறந்து போராடும் அவருக்குப் பேரளவில் மக்கள் செல்வாக்கு இருக்கும் என்று கருதப்பட்டது. ஆனால் வாக்குகள் எண்ணப்பட்டபோது, அவர் 90 – வெறும் 90 – வாக்குகளை மட்டுமே பெற்றிருந்தார்.

இது ஷர்மிளாவின் தோல்வியன்று, மணிப்பூர் மக்களின் தோல்வி.

சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தல்களில், தனி மனிதர்களைப் பார்க்காமல், கட்சி சார்ந்தே வாக்குகள் அளிக்கப்பட வேண்டும் என்பது சரியானதுதான். ஆனாலும், இரோம் ஷர்மிளா போன்றவர்களைத் தனித் தட்டில்

# ஆர்.கே.நகர் தேர்தல் இடைத்தேர்தல் அன்று,

# திருப்புமுனைத் தேர்தல்!

**ஜெ**யலலிதாவின் மறைவுக்குப் பின், அவர் வெற்றிபெற்ற சென்னை, ஆர்.கே. நகர் தொகுதியில் இடைத் தேர்தல், வரும் ஏப்ரல் 12 ஆம் தேதி நடைபெறவுள்ளது. இது ஒரு வழக்கமான இடைத்தேர்தல் இல்லை. இதற்கு ஒரு பெரிய முக்கியத்துவம் இருக்கிறது.

ஜெயலலிதாவின் மறைவுக்குப் பின் அது பல துண்டுகளாகப் பிரிந்திருக்கிறது. சசிகலாவின் தலைமையின் கீழ் ஓர் அணியும், பன்னீர்செல்வம் தலைமையின் கீழ் ஓர் அணியும் நிற்க, ஜெயலலிதாவின் அண்ணன் மகள் தீபா ஒரு கட்சியைத் தொடங்கியுள்ளார். எம்.ஜி.ஆரின் அண்ணன் மகன் சந்திரன் என்பவர் சில நாள்களுக்கு







# சுபவீ பக்கம்

ன்



வைத்தே எடை போட்டிருக்க வேண்டும்.

இது ஒருபுறமிருக்க, குற்றவியல் பின்னணி கொண்ட பலரை மக்கள் தங்களின் தொகுதிகளில் தேர்ந்தெடுத்துள்ளனர் என்பதும் வேதனைக்குரியதாகவே உள்ளது. அண்மையில் வெளிவந்த புள்ளிவிவரம் ஒன்று, 2014 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றுள்ள 186 பேர் மீது குற்ற வழக்குகள் உள்ளன என்று கூறுகின்றது. கொலை, கொள்ளை, ஆள் கடத்தல், பாலியல் வன்முறை போன்ற வழக்குகள் அவர்கள் மீது பதிவு செய்யப்பட்டுள்ளன. அவர்களில் 63 பேர் பா.ஜ.க. கட்சியையும், 8 பேர் சிவசேனாவையும் சேர்ந்தவர்கள் என்கிறது அந்தக் குறிப்பு.

தமிழ்நாட்டில், பொதுவுடைமைக் கட்சி வேட்பாளர்களில் கூட, குற்ற வழக்குகளில் சிக்கியுள்ள தளி ராமச்சந்திரன் வெற்றி பெற முடிகிறது. மக்களால் பாராட்டப்படும் அய்யா நல்லகண்ணு வெற்றிபெற முடியவில்லை.

முன் திருச்சியில், தன் பங்கிற்கு ஒரு புதுக் கட்சியை அறிவித்துள்ளார். இன்னும் எத்தனை அண்ணன் மகன்களும், மகள்களும் புறப்படுவார்களோ தெரியவில்லை.

மேலே உள்ள எல்லாக் கட்சிகளுக்கும் ஒரே எதிரி தி.மு.க.தான். அதனை வீழ்த்திவிட வேண்டும் என்பதுதான் இந்த நான்கு கட்சிகளுக்கு மட்டுமின்றி, யாரோ கல்லெறிய தங்களுக்கும் ஒரு மாங்காய் கிடைக்காதா என்று காத்திருக்கும் பா.ஜ.க. விற்கும் நோக்கம். "கழகங்கள் இல்லாத தமிழகத்தைக் காண வேண்டும்" என்று ஆசைப்படுகிறார், மத்திய அமைச்சர் பொன் ராதாகிருஷ்ணன். கழகங்கள் இல்லையென்றால், அவரை பார்ப்பனியம் எந்த இடத்தில் உட்கார வைத்திருக்கும் என்பது அவருக்குத் தெரியவில்லை.

தமிழ்நாட்டின் 'பழைய கட்சியான' தே.மு.தி.க.வும் அங்கு போட்டியிடுகின்றது. இனி வாழ்நாளில்,அக்கட்சி வைகோவுடன் கூட்டு சேர வாய்ப்பில்லை. தனித்துதான் போட்டியிடுகிறதாம்.

சிதறிக் கிடக்கும் , வலிமையற்ற கட்சிகள்தானே என்று தி.மு.க. தொண்டர்கள் நினைத்துவிடக் கூடாது. இடைத்தேர்தல் என்றாலே அங்கு ஆளும் கட்சியின் அதிகாரம் இல்லாமல் இருக்காது. மேலும், சசிகலா அணியிடம் உள்ள பணபலமும், பன்னீர்செல்வத்தை இயக்கும் பா.ஜ.க.வும் பாதாளம் வரை பாயக் கூடியன. எனினும், கவனமாக இருந்தால், தி.மு.க. தலைமைக்கு உள்ள செல்வாக்கும், தொண்டர்களின் ஓய்வறியா உழைப்பும், பெரும் வெற்றியைத் தேடித் தரும்.

## ஜூனியர் விகடன் மறுப்பு

12.3.17 ஆம் நாளிட்ட ஜூ.வி. இதழில், "திராவிட ஆட்சி 50 ஆண்டுகள்" சிறப்புக் கட்டுரைகள் பகுதியில், பதித்திரிகையாளர் சுப்பு, "கருணாநிதி முதலமைச்சராக இருந்த போது , திண்ணியம் என்ற ஊரில், பஞ் சாயத்துத் தலைவரின் ஊழலைப் பற்றிக் கேள்வி கேட்டதற்காக, ஏழை தலித் ஒருவர், மனித மலத்தை உண்ணும்படி தண்டிக்கப்பட்டார்" என்று எழுதியுள்ளார்.


தி.மு.க.வின் மீது பழி போடவேண்டும் என்று காத்திருக்கும் சுப்பு போன்றவர்கள், அந்த நோக்கில் உண்மைக்கு மாறான எந்த ஒன்றையும் சொல்லத் தயங்க மாட்டார்கள் என்பதைத்தான் இந்த வரிகள் காட்டுகின்றன. திருச்சிக்கு அருகில் உள்ள திண்ணியத்தில் அந்தக் கொடுமை நடைபெற்றது 2002 ஆம் ஆண்டு மே மாதம். அப்போது கலைஞரா முதலமைச்சராக இருந்தார்? 2002-06 காலகட்டத்தில் தமிழக முதல்வர் ஜெயலலிதா என்பது அவருக்குத் தெரியாதா? உண்மைகளை இப்படி அப்பட்டமாகத் திரித்துப் பேசும் இவர், "மூத்த பத்திரிகையாளராம்". நல்ல கூத்து!

## தி.மு.க. வரலாறு

### நூல்கள் வெளியீட்டு விழா

திராவிட இயக்க ஆய்வாளர் க. திருநாவுக்கரசு, தி.மு.க.வின் வரலாற்றை ஆறு தொகுதிகளாக எழுதி வருகின்றார். அவற்றுள் முதல் மூன்று தொகுதிகள் வரும் 25 ஆம் தேதி (25.03.2017) மாலை 6 மணிக்கு, சென்னை, அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் வெளியிடப்பட உள்ளது.

கழகத்தின் பொதுச்செயலாளர் இனமானப் பேராசிரியர் தலைமையில், கழகத்தின் செயல் தலைவர், தளபதி மு.க. ஸ்டாலின் நூல்களை வெளியிடுகிறார். தி.மு.க.வின் முதன்மைச் செயலாளர் துரைமுருகன், முன்னாள் மத்திய அமைச்சர் ஆ. இராசா, திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் பொதுச்செயலாளர் சுப. வீரபாண்டியன் ஆகியோர் நூல்களைப் பற்றிய கருத்துரைகளை வழங்குகின்றனர். தொ.மு.ச. மாநிலச் செயலர் சண்முகம் வரவேற்க, நக்கீரன் பதிப்பகம் சிற்றரசு நன்றி கூறுகின்றார்.



ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

நிர்வாக ஆசிரியர்கள்
**சிற்பி செல்வராஜ்**
**கி.செந்தில்**

வெளியிடுபவர்
**கோ.தினகரன்**

அச்சில் உதவி
**அ.சாதிக் பாட்சா**
**ஜெம் கிராபிக்ஸ்**

இணையதளம்
**www.keertru.com**

சுபவீ வலைப்பூ
**www.subavee.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
**122/130 என்.டி. ராமராவ் தெரு**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை - 600 024**

**தொலைபேசி: 044-4204 7162**

▼ **கரூர் மாவட்ட அமைப்பாளர்**



தோழர் வே.சிலம்புச் செல்வன் திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் கரூர் மாவட்ட அமைப்பாளராக, மாநிலக் கூடுதல் அமைப்புச் செயலாளர் புலேந்திரனால் நியமிக்கப்பட்டுள்ளார்.

## தமிழுக்கு இழப்பு




**செ**ன்ற மாதம் தமிழறிஞர் மணவை முஸ்தபா அவர்களை இழந்தோம். இந்த மாதம் தமிழ் உணர்வாளர் ஒசூர் மூவேந்தன் நம்மை விட்டுப் பிரிந்துள்ளார்.

30 ஆண்டுகளுக்கும் மேலாக யுனெஸ்கோ கூரியர் இதழின் தமிழ்ப் பதிப்புக்கு ஆசிரியராக இருந்த மணவை முஸ்தபா, தமிழில் கலைச்சொற்களைக் கொண்டு வந்ததில் முதல் வரிசையில் இருப்பவர். நல்ல மொழிபெயர்ப்பு நூல்களையும் அவர் தந்துள்ளார். பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ளார். 2006-11 ஆம் ஆண்டுகளில், தமிழக அரசின் அறிவியல் தமிழ் மன்றத்தின் தலைவராக நியமிக்கப்பட்டு அரும்பணி ஆற்றியவர்.

ஒசூர் பகுதியில் கடந்த பல்லாண்டுகளாகத் தமிழ்ப் பணி ஆற்றி வந்தவர் மூவேந்தன். அங்குள்ள அனைத்துச் தமிழ்ச் சங்கங்கள், திராவிட இயக்கங்கள் ஆகியனவற்றுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர். நம் கருஞ்சட்டைத் தமிழர் இதழை அப்பகுதியில் பலருக்கு அறிமுகம் செய்தவர்.

இருவரின் இறப்பும், தமிழுக்கு இழப்பு!

## திராவிடம் வாழும்!



**தி**ராவிடக் கட்சிகளின் பணி முடிந்து விட்டதாக நான் கருதவில்லை. திராவிடம் ஒரு சக்தி. அத ஒன்னும் பண்ண முடியாது. பிரபந்த காலத்துல இருந்து திராவிடம் இருக்கு. தமிழ் வாழ்த்து இருக்கும் வரை திராவிடம் இருக்கும். அது ஒரு இன உணர்வு.

**நடிகர் கமல்ஹாசன்**
**(புதிய தலைமுறை தொலைக்காட்சி நேர்காணலில்)**

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## வெட்கக்கேடு

**இ**னவெறிப் பிடித்த இலங்கை அரசு ஈழத்தமிழர்களைக் கொன்று குவித்தது போதாதென்று, தமிழக மீனவர்களையும் சுட்டுக்கொல்லத் தொடங்கியிருக்கிறது.

அண்மையில் இராமேஸ்சுவரத்திலிருந்து கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற பிரிட்சோ என்ற மீனவர் இலங்கை அரசால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

பிரிட்சோ கொல்லப்பட்டதை அறிந்து தமிழகத்தில் எதிர்ப்பு கடுமையானவுடன், இலங்கை அரசு நாங்கள் சுடவில்லை என்று மறுப்பு தெரிவித்திருக்கிறது.

அப்படியானால் யார் சுட்டது சீனா, ஜப்பான், மலேசியா அல்லது அமெரிக்கக் கடற்படை சுட்டனர் என்று இலங்கை அரசு சொல்கிறதா.

பிரச்னையின் விளைவை கொஞ்சம் கூட சிந்திக்கத் தெரியாமல், பிரச்னையை திசைதிருப்பும் வண்ணம் தமிழக பா.ஜ.க. தலைவர் இந்த நேரத்தில், “சீனாவில் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். கொல்லப்பட்டவர் யார் என்று இனிமேல்தான் தெரியும்” என்று குறுக்குச்சால் ஓடவிட்டுப் பார்த்தார்.

இந்திய துணைக் கண்டத்தை ஏக இந்தியா என்று சொல்லித் திரியும் மத்திய பா.ஜ.க. அரசுக்கு தமிழ்நாட்டு மீனவர்கள் தமிழராக மட்டும்தான் தெரிகிறார்கள், இந்தியராகத் தெரியவில்லை.

ஈழத்தமிழர்களைக் கொன்று குவிக்க இலங்கை அரசுக்குத் துணை நின்றதுபோல, தமிழக மீனவர்கள் இலங்கை அரசால் கொல்லப்படுவதற்கு மத்திய அரசு துணைபோய்க் கொண்டு இருக்கிறது.

இலங்கை அரசை எச்சரிக்கை செய்யக் கூட மத்திய அரசு மறுக்கிறது. அண்மையில் நடந்த பிரிட்சோ படுகொலையை முன்னிட்டு இலங்கை அரசின் தூதரக உறவை இந்நேரம் துண்டித்திருக்க வேண்டாமா?

எதிரி நாடு என்று பாகிஸ்தானைச் சொல்கிறது இந்தியா. அவர்கள் இந்திய மீனவர்களை இதுவரை சுட்டுக் கொல்லவில்லை. நட்பு நாடு என்று சொல்கிக் கொள்ளும் இலங்கை அரசோ தமிழ் மீனவர்களைச் சுட்டுக்கொல்கிறது.

இலங்கை அரசால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்கள் தமிழகக் கடல் எல்லையில் கூட மீன் பிடிக்க அஞ்சுகிறார்கள், இதை விட வெட்கக்கேடு வேறு என்ன இருக்கமுடியும்?

## வெற்றியை நோக்கி வீறுகொண்டெழுக!

வரவிருக்கும் ஆர்.கே. நகர் இடைத்தேர்தல், வெறுமனே ஓர் இடைத்தேர்தலன்று. எதிர்காலத் தமிழ்நாட்டில் ஏற்படவிருக்கும் நல்ல மாற்றத்திற்கு எழுதப்படும் முன்னுரையாகும். இன்று தமிழகத்தில் உள்ள குற்றப் பின்னணி பினாமி ஆட்சி ஒழிந்து, செயல் தலைவர், தளபதியின் தலைமையில் தி.மு.க. ஆட்சி மலர வழிவகுக்கப் போகும் தேர்தல். எனவே இத்தேர்தலில்,பரப்புரைக் கூட்டங்களில் கலந்து கொள்வதோடு மட்டுமின்றி, இயக்கத்தின் பொதுச்செயலாளர் சுப. வீரபாண்டியன் தலைமையில், வீடு வீடாகச் சென்று வாக்குகளைச் சேகரிக்கவும் பேரவை முடிவு செய்துள்ளது.

ஆர்.கே. நகர் தொகுதி மக்கள் அனைவரும், தி.மு.கழக வேட்பாளருக்கு வாக்களித்துப் பெருவாரியான வாக்குகள் வேறுபாட்டில் தி.மு.க.வை வெற்றி பெறச் செய்ய வேண்டுமெனப் பேரவை கேட்டுக் கொள்கின்றது.

## வேண்டுகோள்

‘**க**ருஞ்சட்டைத் தமிழர்’ இதழுக்கு ஆண்டுக் கட்டணம், வாழ்நாள் கட்டணம் செலுத்தி இதழ் வரப்பெறாதவர்கள் தயவு செய்து அலுவலகத்தைத் தொடர்பு கொள்ள வேண்டுகிறோம். தொடர்பு எண்: 044-420 471 62.

**- பொறுப்பாசிரியர்**

## மறக்க முடியுமா?

# பேராசிரியர் மா.இராசமாணிக்கனார்

எழில்.இளங்கோவன்

நில அளவையாளராக இருந்து வட்டாட்சியராகப் பதவி உயர்வு பெற்ற மாணிக்கம் – தாயாரம்மாள் இணையரின் ஏழு பிள்ளைகளுள் மா.இராசமாணிக்கனாரும் ஒருவர்.

1907ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 12ஆம் நாள் இவர் பிறந்தார்.

இராசமாணிக்கனாரின் தந்தை மாணிக்கம் வட்டாட்சியர் என்பதனால் அடிக்கடி பணி மாறுதல் பெற்றுச் சென்று கொண்டிருந்தார்.

அதனால் இராசமாணிக்கனாரின் தொடக்க நிலைப் படிப்பு தடைபட்டு, தொடர முடியாமல் இருந்தது.

இந்நிலையில் ஆந்திர மாநிலம் சித்தூரில் இவரின் தந்தை 4 ஆண்டுகள் பணிபுரிந்தார். அப்போதுதான் இராசமாணிக்கனார் நான்காம் வகுப்பு வரை தெலுங்கு மொழியில் பயின்றார்.

குறுகிய காலத்தில் தந்தை மரணம் அடைந்ததால் மாணிக்கனாரைக் கவனிக்கும் பொறுப்பு, அவரின் அண்ணன் இராமகிருட்டிணனுக்கு ஏற்பட்டது.

குடும்ப வறுமை காரணமாக நன்னிலத்தில் ஒரு தையல் கடையில், சிறுவனாக இருந்த தம்பி இராசமாணிக்கனாரை வேலைக்குச் சேர்த்து விட்டார் அண்ணன்.

ஒரு நாள் தஞ்சை புனித பீட்டர் பள்ளியின் தலைமை ஆசிரியரை சந்தித்து தான் படிக்க விரும்புவதாகச் சொல்லியிருக்கிறார் இராசமாணிக்கனார்.

தலைமை ஆசிரியரின் உதவியால் அப்பள்ளியில் பயின்று இறுதித் தேர்வில் முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்றார் இராசமாணிக்கனார்.

அப்பள்ளியில் ஆசிரியராக இருந்த கரந்தை கவிஞர் இரா.வெங்கடாச்சலம், இராசமாணிக்கனாரின் அறிவாற்றலைக் கண்டு வியந்து, அவரைக் கரந்தை உமாமகேசுவரனார், நா.மு.வேங்கடசாமி நாட்டார், ரா.ராகவையங்கார் ஆகிய அறிஞர் பெருமக்களிடம் அனுப்பிப் பயிலச்செய்தார்.

1928ஆம் ஆண்டு சென்னை வந்த இராசமாணிக்கனார், வண்ணாரப்பேட்டையில் இருந்த தியாகராயர் உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியர் பணியில் சேர்ந்தார்.

1935ஆம் ஆண்டு வித்துவான் தேர்வில் தேறினார்.

1939ஆம் ஆண்டு பி.ஓ.எல். பட்டம் பெற்றார்.

1945ஆம் ஆண்டு ‘பெரியபுராண ஆராய்ச்சி’ என்ற ஆய்வுக்கட்டுரைக்காக எம்.ஓ.எல். பட்டம் பெற்றார்.

1951 ஆம் ஆண்டு முனைவர் பட்டம் பெற்றார்.

இவரின் இளமைக் காலத்தில் சித்தர்களின் பாடல்கள், வடலூர் வள்ளலாரின் திருஅருட்பா போன்றவைகளை ஆழ்ந்து படித்தார்.



அதன் விளைவாக இவரிடம் சுயமரியாதைச் சிந்தனைகள் மேலேங்கி நின்றன.

சாதி ஒழிப்பு பற்றிக் கட்டுரைகள் எழுதியிருக்கிறார்.

தமிழர்களின் திருமண இல்லங்களில் சடங்கு சம்பிரதாயங்களுடன், ஓமம் வளர்த்துச் செய்யும் சடங்குத் திருமணங்களை ஏற்க மறுத்தார்.

அதற்காகவே ‘தமிழர் திருமணம்’ என்ற முற்போக்கு நூலை எழுதிச் சுயமரியாதைத் திருமணத்தை வரவேற்றார்.

1947 தொடங்கி 1953 வரை சென்னை விவேகானந்தா கல்லூரியில் விரிவுரையாளராக இருந்தார்.

1953ஆம் ஆண்டில் மதுரை தியாகராயர் கல்லூரியில் பேராசிரியராகப் பொறுப்பேற்று தமிழ்த் துறைத் தலைவராகவும் விளங்கினார்.

1959 தொடக்கம் 1967 வரை சென்னைப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியராகவும், தமிழ்த் துறைத் தலைவராகவும் பணியாற்றியிருக்கிறார்.

சைவ சித்தாந்தம் குறித்த அவரின் ஆய்வுகளும், கட்டுரைகளும், நூல்களும் பெரும் வரவேற்பைப் பெற்றன. அதனால் –

திருவாவடுதுறை ஆதினம் 1959ஆம் ஆண்டு இவருக்கு ‘சைவ வரலாற்று ஆராய்ச்சிப் பேரறிஞர்’ என்ற பட்டத்தை வழங்கினார்.

மதுரை திருஞானசம்பந்த ஆதினத்திடமிருந்து 1955ஆம் ஆண்டு ‘ஆராய்ச்சிக் கலைஞர்’ என்ற பட்டம் பெற்றார்.

தருமபுரம் ஆதினம் 1963ஆம் ஆண்டு ‘சைவ இலக்கியப் பேரறிஞர்’ என்று பட்டம் வழங்கிப் பாராட்டி மகிழ்ந்தார்.

1930ஆம் ஆண்டு மா.இராசமாணிக்கனார் சென்னை வண்ணாரப்பேட்டை தியாகராயர் பள்ளியில் ஆசிரியராக இருந்த கால கட்டங்களில் –

- ஹர்சவர்தனன்
- முடியுடை மூவேந்தர்கள்
- பொற்கால வாசகம்
- முசோலினி

– ஆகிய நூல்களை எழுதினார்.

தொடர்ந்து அவர் தமிழ், வரலாறு, இலக்கியம், சைவம் போன்ற பல ஆய்வு நூல்களை எழுதியிருக்கிறார்.

பல்லவர் வரலாறு – பல்லவப் பேரரசர்– மொகஞ்சதாரோ அல்லது சிந்துவெளி நாகரிகம் – தமிழக வரலாறும் பண்பாடும் – தமிழ்மொழி இலக்கிய வரலாறு – சோழர் வரலாறு – தமிழ் இனம் – தமிழக ஆட்சி – தமிழ் அமுதம் – இலக்கிய அமுதம் – தமிழ்நாட்டு வடஎல்லை – தமிழகக் கலைகள் – புதிய தமிழகம் – சிலப்பதிகாரக் காட்சிகள் – சேக்கிழார் – சேக்கிழார் ஆராய்ச்சி – சைவ சமயம் – சைவ சமய வளர்ச்சி – பெரியபுராண ஆராய்ச்சி – நாற்பெரும் புலவர்கள் என்று பல நூல்கள் எழுதியிருக்கிறார்.

இவரின் நூல்கள் நாட்டுடைமையாக்கப் பட்டுள்ளன.

இவர் எழுதிய நூல்களுள் குறிப்பிடத்தக்க ஒரு நூல் ‘பத்துப்பாட்டு ஆராய்ச்சி’.

பேராசிரியர் டாக்டர் மா.இராசமாணிக்கனார் அவர்கள் 1967ஆம் ஆண்டு மே திங்கள் 26ஆம் நாள் மரணம் அடைந்தார்.

சென்னைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் பொறுப்பில் இருந்தபோது மாரடைப்பினால் அவர் மரணம் அடைந்தார்.

அவர் மரணம் அடைவதற்கு முன், அவர் எழுதிய ‘பத்துப்பாட்டு ஆராய்ச்சி’ கையெழுத்துப் படிகளைப் பல்கலைக் கழகத்திடம் கொடுத்து, நூலாக வெளியிடுமாறு வேண்டியிருக்கிறார்.

ஆனால் பேராசிரியர் இராசமாணிக்கனார் மறைந்த உடன், அவர் எழுதிய பத்துப்பாட்டு ஆராய்ச்சி நூலின் கையெழுத்துப் படிகளை ஓர் அறையின் மூலையில் போட்டு மூடிவிட்டார்கள் சென்னை பல்கலைக் கழகத்தார்.

பின்னர் அதே பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராகப் பொறுப்பேற்ற நெ.து.சுந்தரவடிவேலு அவர்கள் தற்செயலாக மூடிக்கிடந்த அறையைத் திறந்து பார்த்தபோது, அறையின் மூலையில் பத்துப் பாட்டு ஆராய்ச்சி கையெழுத்துப் படிகள் கிடப்பதைப் பார்த்தார்.

உடனே அவர் அந்தப் படிகளை எடுத்து அதே பத்துப்பாட்டு என்ற தலைப்பில், பல்கலைக்கழக வெளியீடாக 1970ஆம் ஆண்டு வெளியிடச் செய்தார்.

நெ.து.சுந்தரவடிவேலு சொல்கிறார், “இவர் (இராசமாணிக்கனார்) எழுதிய பத்துப்பாட்டு ஆராய்ச்சியை வெளியிட வேண்டி, தான் பணியாற்றிய சென்னைப் பல்கலைக் கழகத்தாரிடம் ஒப்படைத்ததற்குப் பதில் அவரே வெளியிட்டு இருந்தால், பணமாவது கிடைத்து இருக்கும். சென்னைப் பல்கலைக் கழகம் பத்துப்பாட்டு நூலை, யாரும் காணாத வண்ணம் பூட்டி வைத்துவிட்டது வேதனை”. ●

Karunchattai Tamilar. Date of Publication 12th and 28th of Every Month.
Registered with Registrar of News paper for India No: TN TAM/2009/32719, Post Regd No: TN/CH(C)/427/2016-18,
Licenced to post WPP No: TN/PMG(CCR)WPP - 206/2016-18



9

## செல்லினம்

திறன் பேசிகளில் இப்போது பல தகவல்களைப் பரிமாறுகிறோம். நமது தாய் மொழியில் செய்தியைப் பகிர்வது என்பதற்கு இணையான இன்பம் வேறு இருப்பதாகத் தெரியவில்லை. தமிழ் உள்ளீடு செய்ய விரும்புபவர்களுக்கு உள்ள மிக நல்ல செயலி செல்லினம் மட்டுமே.

செல்லினத்தில் ஒரு நேர்த்தி (Perfection) இருக்கிறது. தமிழில் மிக நல்ல விசைப்பலகையான தமிழ்99. இதுவே உலக தமிழ் இணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட விசைப்பலகை. இவ்விசைப்பலகையில் நீங்கள் தட்டச்சு செய்து பழகினால் விரைவுத்தட்டச்சு திறன்பேசியிலும் எளிதில் சாத்தியப்படும்.

### சொற்பட்டியல்

இரண்டு அல்லது மூன்று எழுத்தினை தட்டச்சியவுடன் அதற்குரிய சொல் தேர்வு வந்து விடுகிறது. சொற்தேர்வு மூலம் நீங்கள் அடுத்த சொல்லிற்கு தாவுதல் எளிமையாக இருக்கிறது. இதில் மொத்தம் 1,00,000 (ஒரு லட்சம்) சொற்கள் இருப்பது நிறைவான நம்பிக்கையினை அளிக்கிறது.

### குறைந்த முயற்சியே போதுமானது

'கட்டிடம், வந்தான், அடுத்தஞ்..' போன்ற சொற்களை தட்டச்சு செய்யும் போது இரண்டு மெய்யெழுத்துகள் தொடர்ந்து வரும் போது மேற்புள்ளியினை அதுவாக வைத்துக்கொள்ளும். 'ந' பிறகு 'த' வரும்போது நவிற்கு மேற்புள்ளியையும் அதுவாக வைத்துக் கொள்ளக்கூடிய வசதி உள்ளது. எனவே இது தட்டச்சு நேரத்தைக் குறைப்பதுடன் விசையை சொடுக்கும் முயற்சியும் குறைவாக இருக்கிறது. செல்லினம் முழுமையான இலக்கண விதிப்படியான எழுத்துணர் கருவியாக உள்ளது. Less tension more work என்பார்களே அதைப்போல இதை ஒரு Brilliant Keyboard ஆக உணர்ந்தேன்.

### சுருக்கு வழி உள்ளீடு

அவசர உலகத்தில் எதற்கும் நேரமில்லை, பட்டனைத்தட்டினால் ரெண்டு இட்டிலியும் தொட்டுக்க சட்டினியும் வரவேண்டும் என்ற கலைவாணரின் பாடலுக்கேற்ப செல்லினத்தில் இரண்டு தட்டெழுத்தில் சொற்றொடர்களை உருவாக்க முடிகிறது. Personal Dictionary என்ற சொல் வங்கி மூலம் நாம் அடிக்கடி பயன்படுத்தும் சொல்லினைக் குறியீடு முறையில் சேர்க்க முடியும். பெரிய சொற்றொடர்களை எளிதில் தட்டச்சலாம்.




சிவதி

### பொதுமறை தெரிந்த செயலி

'சொல்லுக' என தட்டச்சினால் போதும் அடுத்த பகுதியில் 'சொல்லை' என்றும், அதன் தொடர்ச்சியாக 'பிறிதோர்சொல்' எனவும் திருக்குறளை அழகாக எந்த எழுத்தையும் தட்டச்சு செய்யாமல் சொல் தேர்வு மூலமே உங்களால் நிறைவு செய்ய இயலும். கொன்றை வேந்தன் நம் கைக்குள்ளே குடி வந்துவிடுவார். ஊக்கமது என தட்டெழுத்து செய்த அடுத்த நொடியே. 'கைவிடேல்' என்ற சொல் வந்து விடுகிறது. இது நமக்கு ஊக்கமாக இருக்கிறது.

### தகராறுக்கு எந்த 'று'

'சின்னத் தகராறுக்கு சின்ன ரு வும் பெரிய தகராறுக்கு பெரிய று வும் போடு' என வேடிக்கையாகச் சொல்லுவார்கள். இனி இந்த தகராறே வேண்டாம். தவறாகத் தட்டச்சும் சொற்களைக்கூட அதுவாகவே திருத்திக் கொள்கிறது.

### ஆங்கில வழியிலும் தமிழ்

ஆங்கிலத்தில் தட்டெழுதி தமிழில் வரவழைக்கும் பொனிடிக் முறையும் உண்டு. தமிழ் 99 பழகாத ஆரம்ப நிலை பயனர்களுக்கு இது வெகுவாக கைகொடுக்கும். ஒரே ஒரு விசையில் ஆங்கிலத்தத்திருந்து தமிழக்கும் தமிழிலிருந்து ஆங்கிலத்திற்கும் ஒரே சொடுக்கில் மாறலாம்.

### நெடுந்தொடர்

நிறைய தட்டச்சு செய்ய வேண்டும் என நினைக்கும் போது அது திறன் பேசி மற்றும் டேப்லட் எனப்படும் பலகை கணினியிலும் இயலுவதில்லை. செல்லினம் இதற்கு தீர்வு கண்டுள்ளது. External Keyboard மற்றும் ப்ளூ டூத் விசைப்பலகை கொண்டு எளிதாகத் தமிழ் தட்டச்சு செய்ய இயலும்.

வளர்ந்து வரும் தொழில் நுட்பத்திற்குத் தகுந்தவாறு நாளுக்கு நாள் மேம்படுத்திக் கொண்டே வரும் உயிர்ப்புள்ள செயலியாக இது இருக்கிறது.

இதன் நிறுவனர் முத்து நெடுமாறன் அவர்களுக்குத் தமிழ் கூறும் நல்லுலகிலிருந்து ஒரு மலர்க் கொத்து.

### செயலியை டவுன்லோடு செய்ய

https://play.google.com/store/apps/details?id=com.murasu.sellinam

●

Tamil Fortnightly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP

Posted: 17 March 2017

பெறுநர்/To

திரு ..............................

..............................

..............................

..............................

அனுப்புனர்/From

கருஞ்சட்டைத் தமிழர்
122/130, என்.டி.ஆர். தெரு,
ரங்கராசபுரம், கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.
பேச : 044 - 42047162

Karunchattai Tamilar
122/130, N.T.R. St.,
Rengarajapuram, Kodambakkam,
Chennai - 600 024.

Owned and published by G. Dinakaran, From 7/8, Peters Colony, Rayapettah, Chennai - 14, and Printed by R.B. Anandababu at Cosmic Printers, 12 Oil Monger Street, Triplicane, Chennai -5. Editor : Suba. Veerapandian